# பத்மனாபபுரம் நகராட்சி

**செப்டம்பர் 2018–ம் மாதத்திற்கான(10–09–2018) நகர் மன்ற சாதாரண கூட்டப் பொருட்கள் விபரம் .**

## பொருட்கள்

1) இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் சிறிய மின்கலத்துடன் இயக்கும் பேட்டரி ஆப்ரேட்டர் வாகனம் 6 எண்ணம் ரூ.10.80 இலட்சம் மதிப்பீட்டில் விநியோகம் செய்ய 28–09–2018 அன்று மின்னணு முறையில் நேரடியாகவும் ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண். | நிறுவனத்தாரர் பெயர் | தொழில் நுட்ப தகுதியின் விபரம். |
|---|---|---|
| 1. | Nepture Automation Erode | தொழில் நுட்ப தகுதி வாய்தவை |
| 2. | Priyam Industries Coimbatore | ” |
| 3. | Arun Indian Motors | தொழில் நுட்ப தகுதியற்றவை |
| 4. | Eswar Motors | ” |
| 5. | Vatsala Associates | ” |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் உறை பிரிக்கப்பட்டு தொழில் நுட்ப குழுவின் மூலம் ஆய்வு செய்யப்பட்டதில் வரிசை எண். 1 மற்றும் 2–ல் காணும் இரண்டு நிறுவனதாரரின் ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில் நுட்ப தகுதி வாய்ந்தவை என்றும் வரிசை எண். 3, 4 மற்றும் 5–ல் காணும் நிறுவனத்தாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் தொழில் நுட்ப தகுதி அற்றவை என தொழில் நுட்ப குழுவின் மூலம் ஆய்வு செய்யப்பட்டு முடிவு செய்யப்பட்டது.

வரிசை எண். 1 (ம) 2–ல் காணும் நிறுவனத்தார்களின் ஒப்பந்தப்புள்ளியின் விலைப்புள்ளி உறை (Price bid) 03-10-2018 அன்று திறப்பது குறித்து அறிவிப்பு அனுப்பப்பட்டது. மேற்படி அறிவிப்பு அனுப்பப்பட்டதில் மேற்கண்ட இரண்டு நிறுவனத்தார்களில் வரிசை எண். 1–ல் கண்ட நிறுவனத்தார் மட்டும் கலந்து கொண்டனர்.

மேற்படி விலைப்புள்ளி திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது. ஒப்பு நோக்கு பட்டியல் (Comparative Statement) தயார் செய்யப்பட்டதில் வரிசை எண். 1–ல் கண்ட Nepture Automation , Erode நிறுவனத்தார் (ம) வரிசை எண். 2–ல் கண்ட நிறுவனத்தாரின் விலைப்புள்ளிகளை விட ரூ.44400/– குறைவாகவும், மதிப்பீட்டினை விட ரூ. 45000/– குறைவாகவும் கொடுத்துள்ளதால் மேற்கண்ட நிறுவனத்தாரருக்கு மேற்படி பணிக்கு ஒப்பந்த விதிகளின்படி 1 சதவீதம் கூடுதல் வைப்புத் தொகை செலுத்தியும், ஒப்பந்தப் பத்திரம் எழுதி சமர்ப்பிக்க தெரிவித்து ஏற்றுக் கொள்ளும் கடிதம் (Letter Acceptance) வழங்கவும் மேற்படி

ஏற்றுக் கொள்ளும் கடிதம் சமர்ப்பிக்கப்பட்ட பின் பணி உத்திரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.1098/2018/இ1)

**மன்றத் தீர்மானம் எண். 1352**
**அனுமதிக்கப்பட்டது.**

2)பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சேகரமாகும் திடக்கழிவுகளை முறையாக பிரித்து மறு சுழற்சி பயன்பாட்டிற்கு கொண்டு வர இந்நகராட்சி மருந்துக்கோட்டை பகுதியில் நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் மையம் அமைத்து இணைப்புச் சாலை மற்றும் சுற்றுச்சுவர் அமைக்கும் பணியினை ரூ.54.02 இலட்சத்தில் மேற்கொள்ள 28–09–2018 அன்று இரு உறை வடிவில் ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டது.

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் தொழில் நுட்ப தகுதி உறைகள் மட்டும் முதலில் திறக்கப்பட்டது. மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில் நுட்ப உறைகள் திறக்கப்பட்டதில் திரு. சி. ஜெகஸ்லால் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்பம் தகுதி வாய்ந்தவை என்றும் திரு. ஜி. சுந்தர்ராஜ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப தகுதியற்றவை என தொழில் நுட்ப குழுவினால் ஆய்வு செய்து முடிவு செய்யப்பட்டது.

மேற்கண்ட பணிக்கு விலைப்புள்ளி உறை திறக்க திரு. ஜெகஸ்லால் ஒப்பந்ததாரருக்கு 03–10–2018 அன்று திறக்கப்படும் என கடிதம் அனுப்பப்பட்டது. மேற்படி திரு. ஜி. சுந்தர்ராஜ் என்பவருடைய ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப தகுதியற்றவையாக இருப்பதால் அவருடைய ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது.

மேற்படி 03–10–2018 அன்று தொழில் நுட்பம் தகுதி வாய்ந்த திரு. சி. ஜெகஸ்லால் அவர்களின் விலைப்புள்ளி உறை திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது. மேற்படி ஒப்பு நோக்கு பட்டியல் வரிசை எண். 4, 7, 8, 10, 22 மற்றும் 23 ஆகிய 6 இனங்களுக்கும் மதிப்பீட்டினைவிட அதிக விலை விகிதம் கொடுத்துள்ளதால் மேற்கண்ட 6 இனங்களுக்கும் விலை விகிதம் குறைத்து கொடுக்குமாறு 05–10–2018 அன்று திரு., ஜெகஸ்லால் என்பவருக்கு (Negotiation Letter) சம்மத கடிதம் தர அனுப்பப்பட்டது. அதன் படி மேற்கண்ட ஒப்பந்தாரர் கீழ்க்கண்ட விபரப்படி குறைத்துக் கொடுக்க சம்மதக் கடிதம் இவ்வலுவலகத்தில் 05–10–2018 அன்று சமர்ப்பித்துள்ளார்.

| வ.எண். | விபரங்கள் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | விலை குறைந்த விகிதம் | தற்போதைய விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 4 | Plain cement concrete 1:4:8 | 3618 | 50 | 3568 |
| 7 | M 20 Design thick concrete. | 5830 | 100 | 5730 |
| 8 | Plain cement concrete M 30 | 4874 | 50 | 4821 |
| 10 | Brick work in CM 1:5 | 4613 | 100 | 4513 |
| 22 | Structural steel work | 80 | 1 | 79 |
| 23 | Galvanized iron sheets | 750 | 10 | 740 |

மேற்கண்ட சம்மதக் கடிதத்தின் படி ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் ஒப்பந்ததாரர் திரு. ஜெகஸ்லால் என்பவர் மதிப்பீட்டினை விட 4.22 சதவீதம் அதிகமாக கொடுத்துள்ளார்.

எனவே மேற்கண்ட பணியினை தூய்மை இந்தியா திட்டத்தின் அவசர அவசியம் கருதியும், மேற்கண்ட பணிக்கு அதிக அளவில் ஒப்பந்தப்புள்ளி வரவில்லையாததாலும் மதிப்பீட்டினை விட 4.22 சதவீதம் அதிகமாக கொடுத்துள்ள திரு. ஜெகஸ்லால் என்பவரின் ஒப்பந்தத்தினை ஏற்கவும் 1 சதவீதம் கூடுதல் வைப்புத் தொகை செலுத்தி ஒப்பந்தப்பத்திரம் சமா்ப்பிக்க தெரிவித்து Letter of Acceptance மற்றும் பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 1021/2018/ இ1)

**மன்றத் தீர்மானம் எண். 1353**

**அனுமதிக்கப்பட்டது.**

3)தமிழ்நாடு சட்ட மன்ற பேரவை 2018–19–ஆம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறைக்கான மான்ய கோரிக்கைகள் விவாதம் நடைபெற்றது. மேற்படி மான்ய கோரிக்கை விவாதத்தின் போது கோரிக்கை எண். 34–ற்கான விவாதத்தில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சிறப்பு திட்டங்கள் செயலாக்க துறை அமைச்சர் அவர்கள் அறிவிப்பு எண்.14–ல் கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்.

‘‘மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வார்டு பகுதிகளிலும் உயர் தரம் வாய்ந்த குடிநீர் மிகக் குறைந்த விலையில் வழங்க தானியங்கும் குடிநீர் மையம் (Automatic Water Vending Machine Center’s) நிறுவப்படும்’’.

மேற்கண்ட அறிவிப்பின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 17018/2018/குவ–1, நாள் 23–08–2018–ன் படியும் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடிதம் ந.க.எண்.3137/2018/ஆ1, நாள் 04–09–2018 குறிப்பிட்டதற்கிணங்க பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டு பகுதிகளிலும் வார்டு 1 வீதம் 21 வார்டுகளுக்கு தானியங்கி குடிநீர் மையம் (Automatic Water Vending Center) அமைக்கவும், தற்போது முதல் கட்டமாக கீழ்க்கண்ட இடங்களில் தேர்வு செய்யப்பட்டு DBFOT(Design, Build, Finance Operators Transfor) முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்படவுள்ளது.

| வ,எண் | வார்டு எண் | தானியங்கி குடிநீர் மையம் நிறுவப்படும் இடங்களின் விபரம். |
|---|---|---|
| 1. | 5 | அரண்மனைக்கோட்டை முன்புறம் |
| 2. | 6 | முடக்குளம் |
| 3. | 7 | இழுப்பகோணம் |
| 4. | 14 | வாழவிளை |
| 5. | 15 | தக்கலை பேருந்து நிலையம் |
| 6. | 20 | புலியூர் குறிச்சி |
| 7. | 21 | குமாரகோவில். |

தற்சமயம் மேற்கண்ட தேர்வு செய்யப்பட்ட இடங்களில் தானியங்கி குடிநீர் மையம் அமைக்கவும், தனியார் தொழில் நிறுவனங்கள்/தொழில் முனைபோர்களுடன் இணைந்து சமூக பொறுப்புணர்வு மற்றும் பிற வகையிலான நிதியினை பெற்று Public Private Partnership (PPP) உடன் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1630/2018/இ1)**

**மன்றத் தீர்மானம் எண். 1354**
**அனுமதிக்கப்பட்டது.**

4)இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்கள் பயன்பாட்டிற்கு இல்லாத வகையில் பயனற்ற வகையில் உள்ள பழைய சமுதாய கழிப்பிடங்களை இடித்து அகற்றுமாறு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் ஆய்வுக் கூட்டத்தின் போதும் கடிதம் ந.க.எண்.1540/2015/அ4, நாள் 17–07–2018–ன் படியும் அறிவுறுத்தப்பட்டது. மேலும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.1710/2018/பி1, நாள் 10–08–2018–ன் படி மேற்கண்ட பாதுகாப்பற்ற பயன்படாத வகையில் உள்ள கழிப்பிடங்களை அகற்ற அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி மேற்படி இந்நகராட்சிக்குட்பட்ட இலுப்ப கோணம், வாழவிளை கோட்டை சுவர் அருகாமையில் அமைந்துள்ள கழிப்பிடம் மற்றும் ஆர்.சி.தெரு சிறுகடை பகுதியில் ஆற்றின் கரையோரம் அமைந்துள்ள பழைய கழிப்பிடங்களை இடித்து அகற்றிட ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் 28–09–2018 அன்று ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டதில் கீழ்க்காணும் விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டன.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டினை விட | |
|---|---|---|---|
| | | குறைவு (சதவீதம்) | அதிகம் (சதவீதம்) |
| 1. | திரு. சி. ஜெகஸ்லால் அறப்புரைவிளை, பரைக்கோடு | 0.18 | – |
| 2. | திரு.ஆஸ்டின் கில்லாரி | – | 1.93 |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. சி. ஜெகஸ்லால், என்பவர் மதிப்பீட்டினை விட 0.18 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.455/2018/இ 1)
**மன்றத் தீர்மானம் எண். 1355**
**அனுமதிக்கப்பட்டது.**

5)தமிழ்நாடு அரசாணை நிலை எண்.8, ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் (ம.அ.தி–3) துறை நாள் 08–01–2018–ன் படி அம்மா இருசக்கர வாகன திட்டத்தின் கீழ் பத்மனாபபுரம் நகராட்சி நகர்ப்புற பகுதிகளில் வாழும் மகளிர் பணியிடங்கள் மற்றும் பிற இடங்களுக்கு எளிதில் செல்ல இருசக்கர வாகனம் வாங்க மானியம் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி இந்நகராட்சிக்குட்பட்ட முக்கிய பகுதிகளான டவுண்உறால், பேருந்து நிலையம் (ம) நகராட்சி அலுவலகம் ஆகிய இடங்களில் பொது மக்கள் அறியும் விளம்பர பேனர்கள் (Flax Board) **3** எண்ணம் ( 8x4= 3 pipe)வைக்கப்பட்டதற்கு Techno Digital works and Traders, தக்கலை நிறுவனத்திற்கு தொகை ரூ.1460/—ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.0118/2018/இ 1)

**மன்றத் தீர்மானம் எண். 1356**
**அனுமதிக்கப்படுகிறது.**

**6)**தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2019—2020—ன் கீழ் பத்மனாபபுரம் நகராட்சிப் பகுதியில் சேதமடைந்த சாலைகளை ரூ.100 இலட்சம் மதிப்பீட்டில் மேம்பாடு செய்ய 28—09—2018 அன்று மின்னணு முறையிலும் , நேரடியாகவும் ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில் நுட்ப உறை திறக்கப்பட்டு தொழில் நுட்ப குழுவின் மூலம் ஆய்வு செய்ப்பட்டதில் திரு. ஜீன்ஸ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மட்டும் தகுதி வாய்ந்தவை என முடிவு செய்யப்பட்டது. மற்ற ஒப்பந்தப்புள்ளியான திரு. சி. ராஜன் என்பவரின் தொழில் நுட்ப உறையில் முன் அனுபவ சான்றிதழ் 50 இலட்சத்திற்கும் குறைவாக உள்ளது மற்றும் Annexure A to H வரையில் நிரப்பப்படாமலும், Notary Public மூலம் ஒப்புகை சான்று பெறப்படாமலும் உள்ளதால் நிராகரிக்கப்பட்டது. மேற்படி ஜீன்ஸ் என்ற ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளி உறையினை 03—10—2018 அன்று திறக்கப்படும் என ஒப்பந்ததாரருக்கு அறிவிப்பு கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது. மேற்படி 03—10—2018 அன்று திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது.

மேற்கண்ட ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் ஒப்பந்ததாரர் திரு. ஜீன்ஸ் என்பவர் மதிப்பீட்டினை விட 0.04 சதவீதம் குறைவாக கொடுத்துள்ளதால் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று Letter of Acceptance கடிதம் வழங்கவும் கூடுதல் வைப்புத் தொகை 1 சதவீதம் செலுத்தி ஒப்பந்ததாரர் சமர்ப்பித்தவுடன் பணி உத்திரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.1021/2018/இ1)

**மன்றத் தீர்மானம் எண். 1357**
**அனுமதிக்கப்பட்டது.**

7)கன்னியாகுமரி மாவட்டத்தில் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா 22–09–2018 அன்று தமிழக அரசின் சார்பில் கொண்டாட இருப்பதால் விளம்பர பலகைகள் நிறுவும் படி மாவட்ட ஆட்சித் தலைவர், நாகர்கோவில் அவர்களின் கடிதம் ந.க.எண். 427/செ.ம. தொ.அ/2018, நாள் 14–09–2018–ன் படி தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி பத்மனாபபுரம் நகராட்சி சார்பாக எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா தொடர்பாக பொது மக்கள் அறிந்திடும் வகையில் இந்நகராட்சிக்குட்பட்ட டவுண்ஹால், பேருந்து நிலையம், தக்கலை பேட்டை சந்தை ஆகிய பகுதிகளில் துணியால் தயாரிக்கப்பட்ட விளம்பர பலகைகள் ‘10x 8’ என்ற அளவில் நிறுவிட விலைப்புள்ளி கோரவும். அதற்காக ஆகும் செலவினத் தொகையினை பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண். 1696/2018/இ1)

**மன்றத் தீர்மானம் எண். 1358**
**அனுமதிக்கப்பட்டது.**

8)இந்நகராட்சியில் தற்போது 3572 எண்ணம் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. புதிய வீட்டுக் குடிநீர் இணைப்பு வழங்கும் பணிக்கு சாலை சீரமைப்பு கட்டணம் மேற்பார்வைக் கட்டணம் மற்றும் வைப்புத் தொகை ஆகியவைகளை

**<u>சிமெண்ட் சாலை</u>**

| குழாய் நீளம் (மீ) | சாலை சீரமைப்புக் கட்டணம் ரூ. | மேற்பார்வைக் கட்டணம் ரூ. | வீட்டுக் குடிநீர் வைப்புத் தொகை ரூ | மொத்தம் ரூ. | வீட்டு உபயோக மற்ற இணைப்புத் தொகை ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 0–15 | 6648 | 3539 | 2000 | 12187 | 5000 | 15187 |
| 15–30 | 12845 | 5839 | 2000 | 20684 | 5000 | 23684 |
| 30–45 | 19043 | 8899 | 2000 | 29942 | 5000 | 32942 |
| 45–75 | 31438 | 13724 | 2000 | 47163 | 5000 | 50163 |
| 75–90 | 37636 | 16252 | 2000 | 55888 | 5000 | 58888 |

தார் சாலை

| குழாய் நீளம் (மீ) | சாலை சீரமைப்புக் கட்டணம் ரூ. | மேற்பார்வைக் கட்டணம் ரூ. | வீட்டுக் குடிநீர் வைப்புத் தொகை ரூ | மொத்தம் ரூ. | வீட்டு உபயோக மற்ற இணைப்புத் தொகை ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 0–15 | 6456 | 3463 | 2000 | 11919 | 5000 | 14919 |
| 15–30 | 12463 | 5686 | 2000 | 20149 | 5000 | 23149 |
| 30–45 | 18469 | 8669 | 2000 | 29138 | 5000 | 32138 |
| 45–75 | 30482 | 13341 | 2000 | 45823 | 5000 | 48823 |
| 75–90 | 36488 | 15793 | 2000 | 54281 | 5000 | 57281 |

மேற்கண்ட விபரப்படி சிமெண்ட் சாலைக்குத் தனியாகவும், தார் சாலைக்கு தனியாகவும் குழாய் நீளத்திற்கு தகுந்தவாறு வசூலிக்க மன்றத் தீர்மானம் எண். நாள் அனுமதி வழங்கப்பட்டது. தற்போது 2018–19–ம் ஆண்டு நிதியாண்டிற்கு மேற்கண்ட சாலை சீரமைப்பு கட்டணம் மற்றும் மேற்பார்வை கட்டணத்தை 5 சதவீதம் உயர்த்தி மதிப்பீடு தயார் செய்ய அரசாணை எண்.97, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 12–07–2007–ன் படி கீழ்கண்டவாறு மதிப்பீடு தயார் செய்ததற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>சிமெண்ட் சாலை</u>**

| குழாய் நீளம் (மீ) | சாலை சீரமைப்புக் கட்டணம் ரூ. | மேற்பார்வைக் கட்டணம் ரூ. | வீட்டுக் குடிநீர் வைப்புத் தொகை ரூ | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|
| 0–15 | 6980 | 3716 | 2000 | 12696 |
| 15–30 | 13488 | 6131 | 2000 | 21618 |
| 30–45 | 19995 | 9343 | 2000 | 31339 |
| 45–75 | 33010 | 14410 | 2000 | 49421 |

| | | | | |
|---|---|---|---|---|
| 75–90 | 39518 | 17065 | 2000 | 58582 |

**<u>தார் சாலை</u>**

| குழாய் நீளம் (மீ) | சாலை சீரமைப்புக் கட்டணம் ரூ. | மேற்பார்வைக் கட்டணம் ரூ. | வீட்டுக் குடிநீர் வைப்புத் தொகை ரூ | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|
| 0–15 | 6779 | 3636 | 2000 | 12415 |
| 15–30 | 13086 | 5971 | 2000 | 21056 |
| 30–45 | 19392 | 9102 | 2000 | 30493 |
| 45–75 | 32006 | 14009 | 2000 | 48014 |
| 75–90 | 38312 | 16582 | 2000 | 51895 |

மேற்கண்ட கட்டணம் 01–11–2018 முதல் 31–03–2018 வரை புதிய குடிநீர் இணைப்பு வழங்க அமுல்படுத்த அனுமதி வேண்டப்படுகிறது.

<u>குறிப்பு :–</u>வீட்டு உபயோகம் அல்லாத குடிநீர் இணைப்பிற்கு வைப்புத் தொகை ரூ.5000/– செலுத்த வேண்டும்.

**மன்றத் தீர்மானம் எண். 1359**
**அனுமதிக்கப்பட்டது.**

9) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18 புலியூர்குறிச்சி சந்தை வழி சாலையில் கதவு எண்.8/4 என்ற எண்ணுள்ள குடியிருப்பு முன்புறம் உள்ள மின்கம்பம் (FI-94) உள்ளது. மேற்படி பகுதியில் இரவு நேரங்களில் மிகவும் இருளாகவும் பொது மக்கள் நடந்து செல்ல முடியாமல் அப்பகுதி மிகவும் இருள் சூழ்ந்த நிலையில் உள்ளது.

மேற்கண்ட பகுதியில் பொது மக்கள் நலன் கருதி மின்கம்பம் எண். FI-94 என்ற மின் கம்பத்தில் புதியதாக ஒரு மின் விளக்கு பொருத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 1861/2018/இ1)

**மன்றத் தீர்மானம் எண். 1360**
**அனுமதிக்கப்பட்டது.**

தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
பத்மனாபபுரம் நகராட்சி.